[1983 பிப்ரவரி 14

(ஆ) ஒவ்வொரு காலாண்டிலும் மாநிலத்திற்கென ஒதுக்கப் படும் சிமெண்ட்டில் ஒரு குறிப்பிட்ட அளவு சிறுதொழில்களுக் கென ஒதுக்கப்படுகிறது.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இதற்கு முன்னாலேயிருந்த ஆட்சிக் காலத்திலே சிமெண்ட் டை மூலப் பொருளாகக் கொண்டு நடத்தும் தொழிற்சாலைக்கு சிமெண்ட் பெர்மிட் வழங்கப்பட்டுள்ளதா ? அப்படியானால், எத்தனை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என் பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, இதற்கு முன்னாலே சுமார் 13 ஆயிரம் டன்கள் வரைக்கும் சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு சிறுதொழில்களுக்கு ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்பட்டு உள்ளது. எத்தனை தொழில்களுக்கு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அதற் கென தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

[முற்பகல் 10–20]

திரு. ச. அங்குசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழிலாக நடத்திக்கொண்டு இருக்கும் மொசைக்கல் தயாரித் தல், சிமெண்ட் கிராதி தயாரித்தல், சிமெண்ட் ஸ்லாப் தயாரித் தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நடத்துபவர் களுக்குப் பர்மிட் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலை வர் அவர்களே, ஏற்கெனவே கொடுத்துக்கொண்டுதான் வருகி றார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 280—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஆம். திருச்சி மாவட்டம் மாயனூரில் சுமார் 8 கோடி மதிப்பீட்டில் ஒரு சிமெண்ட் குழாய் தயாரிக்கும் தொழிற் சாலை நிறுவப்படவிருக்கிறது.

1983 பிப்ரவரி 14]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் தொழிற்சாலையின் கட்டுமான பணி எப்போதும் துவங்கப்படும். எப்போது அது முடிவு அடையும்? அதனால் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே—ஜூன் மாதங்களில் அதனுடைய பணிகள் துவங்கப்பட இருக்கின்றன. பணி துவங்கப்பட்ட காலத்தில் இருந்து 30 மாதத்திற்குள் அந்தத் திட்டம் முடிக்கப்படும். இதனால் சுமார் 500 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே அமைக்கப்படவிருக்கும் அந்தத் தொழிற்சாலைக்கு நிலங்கள் கொடுத்த குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் மட்டுமல்ல, எந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தாலும் அதற்கு நிலம் கொடுப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று அரசு ஆணை ஏற்கனவே அமலில் இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கின்ற இந்த சிமெண்ட் தொழிற்சாலையில் 500 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் அந்தத் தொழிற்சாலை நிறுவ நிலம் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். அதுபோக, மீதமுள்ள இடங்களில் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் ஏற்கனவே அமலில் இருக்கிறது. எந்த மாவட்டத்தில் தொழிற்சாலை துவங்கப்படவிருக்கிறதோ அந்த மாவட்டத்தில் இருக்கும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்குத் தான் முன்னுரிமை தரப்படுகிறது. அந்த மாவட்டத்தில் போதுமான ஆட்கள் இல்லை என்கிற நிலைமை ஏற்படுகிற போதுதான் அருகில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள ஆட்களைத் தேர்தெடுக்கிறார்கள்,